DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 21/2023
Miscellaneous :
Sessions : PW.1
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பாலமுருகன் |
| Husband Name | துரை |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04/05/2023

**முதல் விசாரணை**

1.)நான் தற்போது மயிலாடுதுரை மாவட்டம் கருவிழந்த நாதபுரத்தில் குடியிருந்து சிற்பவேலை செய்து வருகிறேன். சின்னமதுரைபாக்கத்தில் சிற்பவேலை செய்து கொண்டிருந்தேன். 29-08-2022 ம் தேதி சித்தாமுருக்கு நானும் சுகந்தநாதனும் மற்றும் இறந்துபோன முருகனும் இருசக்கர வாகனத்தில் மதுரபாக்கத்திலிருந்து வந்தோம். இருசக்கர வாகனத்தை சுகந்தன் என்பவர் ஓட்டி வந்தார் நான் நடுவில் அமர்ந்து வந்தேன். எனக்கு பின்னால் முருகன் அமர்ந்து வந்தார்.

2. மதியம் 12.30 மணியளவில் மேட்டுபாளையம் அருகே வரும்போது சென்னையிலிருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் வந்த லாரி யூ டன் எடுத்து திண்டிவனம் செல்வதற்காக திரும்பியது. அப்போது சென்னையிலிருந்து வந்த பேருந்து லாரியில் மோதுவதை தவிர்க்க நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. எனக்கு இடுப்பில் அடி எனக்கு பின்னால் அமர்ந்து வந்த முருகன் மீது பேருந்தின் மட்கார்டு மோதியதால் அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்.

3. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி விட்டு நான் மதுராந்தகம் மருத்துவமனைக்கு சென்று பின்னர் செங்கற்பட்டு மருத்துவமனைக்கு சென்றேன். மதுராந்தகம் ஆஸ்பிட்டலில் இருந்தபோது போலிஸார் என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் தாளிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை-

ஒரகடம் அருகேயுள்ள சின்னமதுரபாக்கத்திலிருந்து 10.30 மணிக்கு டிவிஎஸ் எக்ஸ்செல் வண்டியில் நாங்கள் வந்தோம். சுகானந்தத்திற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் நான் பார்க்கவில்லை. நாங்கள் சிறிய இருசக்கர வாகனத்தில் 3 பேர் அமர்ந்து வந்தோம் என்றால் சரிதான்.

2. அந்த வண்டியில் 3 அல்லது 4 அடி மட்ட பலகை கட்டி வந்தோம் என்றால் சரிதான். மேட்டுபாளையத்தில் திரும்பிய லாரியின் பின்புறத்தில் ஒரு காரும் அதற்கு அடுத்து விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தும் இருந்தது என்றால் சரிதான். லாரி யூ டர்ன் எடுத்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். நாங்கள் வலது பக்கம் விழுந்து விட்டோம். இறந்துபோன நபர் இரண்டு சக்கர வாகனத்திலிருந்து நிலை தடுமாறி கீழே விழுந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது சரியல்ல.

3. வாகனம் இடித்திருந்தால் நாங்கள் இடதுபக்கம் விழுந்து இருப்போம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் நான் சுயநினைவுடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டியவரும் சுயநினைவுடன் தான் இருந்தார். விபத்து நடந்த இடத்தில் 2 மணி நேரம் இருந்தேன். அதன் பிறகு தான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

4. விபத்து நடந்த அன்றே மாலை 04.30 மணியளவில் மருத்துவமனையில் போலிஸார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. போலிஸார் படித்து காண்பித்தார்கள். பிறகு 15 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்து கையொப்பம் வாங்கினார்கள். இருசக்கர வாகனத்தில் சட்டத்திற்கு மாறாக 3 நபர்கள் பயணம் செய்ததால் விபத்து ஏற்பட்டது என்றாலும் பேருந்திற்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. இறந்தவர் என்னுடன் பணிபுரிந்த நபர் என்பதால் தவறான புகார் அளித்து விட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.